அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 01/2014 (IV)

எனது இல. EST-2 /05 /POL/0059
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு – 07
2017.05.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு திருத்தமாக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் 1 உப பந்தி மற்றும் 03 பந்தியின் IV உப பந்தி தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை உள்ளடக்கி, திருத்தியமைப்பதற்கு 2017.01.31 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

03. அதற்கமைய 02 ஆம் பந்தியின் 1 உப பந்தி தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படுகின்றன.

> “2007.07.01 திகதிக்கு முன்னர் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது தேர்ச்சி அடிப்படையில் பதவியுயர்வு பெற்று 2017.01.31 ஆந் திகதி 50 வயதினை பூர்த்தியடைந்த அல்லது 2007.07.01 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் தாம் புதிதாக நியமனம் பெற்ற உயர் பதவிக்கு உரிய அடுத்த அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்வது தொடர்பாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்துக்கு அமைய நடாத்தப்படும் 100 மணித்தியால மொழிப் பயிற்சி பாடநெறியில் கலந்துகொள்வது மாத்திரம் போதுமானதாகும்’’

04. அவ்வாறே 03 பந்தியின் IV உப பந்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

> “ஆரம்ப வகுதியின் அனைத்து அலுவலர்கள் தொடர்பாகவும் அடுத்த அரசகரும மொழித் தேர்ச்சி மட்டமான 4 ஆம் வகுதி சித்தியடைய வேண்டியது அவசியமில்லை என்பதுடன் தொடர்பாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்துக்கு அமைய நடாத்தப்படும் 50 மணித்தியால மொழிப் பயிற்சி பாடநெறியில் கலந்துகொள்வது மாத்திரம் போதுமானதாகும்’’

05. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் வழங்கப்படும் பாடவிதானத்துக்கு அமைய இப் பாடநெறிகள் திணைக்களத் தலைவர்களினால் நிறுவன மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் பயிற்சி பாடநெறிகளில் அலுவலர்களைக் கலந்துகொள்ளச் செய்தல், கலந்துகொண்டமைக்கான சான்றிதழ் சான்றிதழ் வழங்குவது குறித்த நிறுவன தவைவர்களின் பொறுப்பாகும். ஆரம்ப வகுதியின் அலுவலர்கள் இப்பாடநெயில் கலந்துகொண்டமைக்காக வழங்கப்படும் சான்றிதழ் அவர்களின் அடுத்துவரும் தரமுயர்வின் போது தகைமையாக கருதப்படுவதுடன், அதற்கமைய உரிய சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேரப்பு நடைமுறை என்பன திருத்தியமைக்கப்பட வெண்டும்.

06. இச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் தவிர அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்குத் திருத்தமாக வெளியிடப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் மேலும் மாற்றமுறாது அமுலிலிருக்கும்.

07. இச் சுற்றறிக்கை 2017.01.31 ஆந் திகதியில் இருந்து வலுவிலிருக்கும்.

ஒப்பம்/ ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு